**<u>மிகவும் அவசரம்</u>**

**அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113**
**சுற்றறிக்கை எண்.4006/ஏ–1/2026, நாள் 30.07.2026**

---

பொருள் : நிர்வாகம் – அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – பணிப்பதிவேடு மற்றும் IFHRMS மென்பொருளில் குடும்ப உறுப்பினர் விவரம் / பொது வருங்கால வைப்பு நிதி / பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் / பணிக்கொடை / சிறப்பு சேமநலநிதி 1984 / சிறப்பு நல நிதி 2000 மற்றும் இதர இனங்களுக்கான வாரிசுரிமைகள் ஏற்கெனவே பதிவு செய்யயாமல் இருப்பது / பதிவு செய்ய கேட்டல் – தொடர்பாக.

பார்வை 1 சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை எண்.02/டி–1/2026, நாள் 16.06.2026

2 கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வரின் செயல்முறை ஆணை எண்.3223/ ஏ–4/2026, நாள் 6.7.2026

---

பார்வை 1–ல் காணும் சுற்றறிக்கையின்படி, 07.07.2026 அன்று சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் நடைபெற்ற கூட்டத்தில், பணிப்பதிவேட்டின் பதிவுகளை அவ்வப்போது சட்டரீதியிலான சேர்த்தல் ( திருமணம் / குழந்தை பிறப்பு ) / நீக்குதல் ( மரணம் / விவாகரத்து ) ஆகிய விவரங்களை முறையாக பதிவு செய்யப்படாத காரணத்தால், தனியர்களின் குடும்பத்தாருக்கு தமிழக அரசால் பெற்று வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் பெற்றுவழங்க இயலாத நிலையில், பல்வேறு சட்டச்சிக்கல்கள் / வழக்குகள் / தாமதங்கள் ஏற்படுவதாகவும், இதில் முதல்வரின் நேர்முக உதவியாளர்கள் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை தொடர்ந்து, இப்பயிலகத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் / அலுவலர்கள் / அமைச்சு / தொழில் நுட்பப் / அடிப்படை பணியாளர்கள் ( சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழக பணியாளர்கள் உட்பட ) **தங்களின் சொந்த விவரங்கள் தங்களால் தெரிவிக்கும்பட்சத்திலேயே அதனை பணிப்பதிவேட்டில் முறைப்படுத்துவதற்கான சாத்தியகூறுகள் உள்ளதால், இப்பொருளின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, 31.07.2026 அன்று நிலைத்தபடி,** தங்களது பணிப்பதிவேடு மற்றும் IFHRMS மென்பொருளில் தங்களது குடும்ப உறுப்பினர் விவரம் / பொது வருங்கால வைப்பு நிதி / பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் நிதி / பணிக்கொடை / சிறப்பு நல நிதி

1984 / சிறப்பு சேமநலநிதி 2000 மற்றும் இதர இனங்களுக்கான வாரிசுரிமை விவரங்களை அதற்கான சுயசான்றொப்பமிடப்பட்ட ஆதார நகல்களுடன் ( திருமணம் சான்றிதழ் / ரேஷன் கார்டு / ஆதார் கார்டு / வங்கி கணக்கு புத்தகம் / புகைப்படம் / பிறப்பு சான்றிதழ் / விவாகரத்து பெற்றிருப்பின் நீதிமன்ற ஆணை / குழந்தை தத்தெடுத்திருப்பின் அதற்கான ஆவணம் ) **தங்களது பணிப்பதிவேடு / இணையவழி பணிப்பதிவேடு / IFHRMS மென்பொருளில் முறைப்படுத்தும் பொருட்டு, 14.08.2026–க்குள் இரட்டை நகல்களில் முதல்வருக்கு அனுப்பி வைக்கும்படி இப்பயிலகத்தில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள் / அலுவலர்கள் / அமைச்சு / தொழில் நுட்பப் / அடிப்படை பணியாளர்கள் ( சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழக பணியாளர்கள் உட்பட ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

மேலும் தனியர்களால் அளிக்கப்படும் தகவல்கள் / ஆவணங்களின் அடிப்படையிலேயே கூர்ந்தாய்வு செய்து பணிப்பதிவேட்டில் வாரிசுரிமை விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது என்றும், தவறான தகவல்கள் அளித்து அவ்விவரங்கள் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பிற்காலத்தில் தெரியவறின் அதனால் ஏற்படும் அனைத்து பின்விளைவுகளுக்கும் முதல்வர் அலுவலகம் பொறுப்பேற்காது என்றும், சம்மந்தப்பட்ட நபர்களே முழுக்காரணம் ஆக்கப்படுவதுடன், அந்நபர்களின் மீது தமிழ்நாடு அரசின் உரிய விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இது மிகவும் அவசரம்**

ஒம்/– பா.பெ. கோவிந்தராசு,
முதல்வர் ( மு.கூ.பொ)

**பெறுநர்**

அனைத்து ஆசிரியர்கள் / அலுவலர்கள் / அமைச்சுப் / தொழில் நுட்பப் / அடிப்படைப் பணியாளர்கள் **) பயிலக வாட்ஸ்அப் குழு மூலம்**

நகல் ஏ – 1 மற்றும் ஏ – 4 இருக்கை எழுத்தர்கள் ) **தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது. வாரிசுதாரர் விவரங்களை பொறுத்தமட்டில் பணிப்பதிவேடு மற்றும் IFHRMS மென்பொருளில் பதிவுகள் மேற்கொள்வதற்கு முன்னர், முதல்வரின் நேர்முக உதவியாளர் மற்றும் முதல்வரின் முன்னனுமதி பெற்றப்பின்னரே, பதிவுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், மேற்படி அலுவலர்கள் வேறுப்பணி / விடுப்பில் இருக்கும் தருணத்தில் முன்னனுமதியின்றி எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளக்கூடாது என்றும், தவறும்பட்சத்தில் அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு சம்மந்தப்பட்ட இருக்கை எழுத்தர்களே முழுபொறுப்பு ஏற்க நேரிடும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

நகல் இணையத்தள பொறுப்பாசிரியர் பயிலக வாட்ஸ்அப் குழு மூலம்
நகல் முதல்வரின் மேசைக்கு
நகல் முதல்வரின் நேர்முக உதவியாளர்
நகல் கண்காணிப்பாளர் ( நிர்வாகம் )
நகல் உதிரி

முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசு பாலிடெக்னிக் கல்லூரி
கெலமங்கலம் – 635 113
கிருஷ்ணகிரி மாவட்டம்.

## படிவம்

| 1. Details of Family | | | |
|---|---|---|---|
| வ.எண் | குடும்ப உறுப்பினரின் பெயர் | பிறந்த தேதி | உறவு முறை |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| 2. General Provident Fund | | | |
|---|---|---|---|
| Nominee | | Alternate Nominees | |
| பெயர் மற்றும் உறவு முறை | % | பெயர் மற்றும் உறவு முறை | % |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| 3. Contribution Pension Scheme | | | |
|---|---|---|---|
| Nominee | | Alternate Nominees | |
| பெயர் மற்றும் உறவு முறை | % | பெயர் மற்றும் உறவு முறை | % |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| 4. Death cum Retirement Gradutiry | | | |
|---|---|---|---|
| Nominee | | Alternate Nominees | |
| பெயர் மற்றும் உறவு முறை | % | பெயர் மற்றும் உறவு முறை | % |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| 5. Special Provident Fund 1984 | | | |
|---|---|---|---|
| **Nominee** | | **Alternate Nominees** | |
| பெயர் மற்றும் உறவு முறை | % | பெயர் மற்றும் உறவு முறை | % |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| Special Provident Fund 2000 | | | |
|---|---|---|---|
| **Nominee** | | **Alternate Nominees** | |
| பெயர் மற்றும் உறவு முறை | % | பெயர் மற்றும் உறவு முறை | % |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

குறிப்பு : 1. தமிழ்நாடு அரசு விதிகளின்படி, திருமணமாகி சட்டரீதியாக விவாகரத்து பெறாதவர்கள் ( கணவன் / மனைவி ) தனியர்களின் வாரிசுதாரராகவே கருதப்படுவர்.

2. வாரிசுதாரர்களாக குறிப்பிடுவர்கள் தொடர்புடைய ஆவணங்களின் நகல்கள் சுயசான்றொப்பமிட்டு அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட விவரங்கள் யாவும் உண்மையெனவும், இதில் ஏதேனும் தவறாக இருப்பின் அதற்கு நானே முழுக்காரணம் என்பதை அறிவேன் என்றும் சான்றளிக்கிறேன்.

**அரசு பணியாளரின் கையொப்பம்**